**டிசம்பர் – 19**

# TNPSC துளிகள்

- இந்திய கிரிக்கெட் வீரர் ஷிகர் தவான் 'The One: Cricket, My Life and More' என்ற தலைப்பிலான தனது சுயசரிதையைப் புது டெல்லியில் வெளியிட்டார்.
- இந்தியாவானது செயலி உருவாக்கத் திட்டத்தின் (MDP) கீழ் மேம்படுத்தப் பட்ட கணினி மேம்பாட்டு மையத்தினால் (C-DAC) உருவாக்கப்பட்ட, அதன் முதல் முழுமையாக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட 1.0 GHz, 64-பிட் டூயல்-கோர் மைக்ரோ பிராசசரை (இரட்டை மையச் செயலி) அறிமுகப்படுத்தியுள்ளது.
- சாய் ஜாதவ், டேஹ்ராடூனில் உள்ள இந்திய இராணுவ அகாடமியில் (IMA) பட்டம் பெற்ற முதல் பெண் அதிகாரி என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
  - 1932 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்திய இராணுவ அகாடமி ஆனது 93 ஆண்டுகளாக ஆண் அதிகாரிகளுக்கு மட்டுமே பயிற்சி அளித்தது.
- மத்தியப் பிரதேசத்தின் மியானா இரயில் நிலையம், 2025 ஆம் ஆண்டு தேசிய எரிசக்தி வளங்காப்பு விருதைப் பெற்றது மற்றும் எரிசக்தி திறன் வாரியத்தினால் (BEE) போக்குவரத்துப் பிரிவில் (இரயில் நிலையம்) சிறந்த செயல்திறன் கொண்ட பிரிவாக அங்கீகரிக்கப்பட்டது.
  - ஆற்றல் செயல்திறன் மற்றும் நிலையான நடைமுறைகளை ஊக்குவிப்பதற்காக 2025 ஆம் ஆண்டு தேசிய எரிசக்தி வளங்காப்பு விருதுகளின் 4 ஆம் பிரிவில் கோவா இரண்டாவது பரிசை வென்றது.
- டாக்டர் ரெட்டி ஆய்வகங்கள் நிறுவனமானது, அதன் ஆரிஜின் மருந்துச் சேவைகள் பிரிவு மூலம் நுசோல்வென்ஸை உற்பத்தி செய்து, தாய்லாந்து மற்றும் தென்னாப்பிரிக்காவில் அதற்கான சந்தை அங்கீகாரத்தைப் பெற உள்ளது.
  - கோனோரியா தொற்றானது நீசீரியா கோனோரியா என்ற பாக்டீரியாவால் ஏற்படுகிறது என்பதோடு இது அதிகரித்து வரும் நுண்ணுயிர்க்கொல்லி எதிர்ப்புத் திறன் காரணமாக உலக சுகாதார அமைப்பினால் "அதிக முன்னுரிமை" பிரிவில் வகைப்படுத்தப் பட்டுள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்


## தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 2025

- நடப்பு விலையில், 2023-24 ஆம் ஆண்டில் 26.88 லட்சம் கோடி ரூபாயாக இருந்த தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) 2024-25 ஆம் ஆண்டில் 31.19 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.
- இதனால், இதில் 16% வளர்ச்சி பதிவாகியுள்ளது.
- கடந்த நான்கு ஆண்டுகளில் மாநிலத்தில், உற்பத்தித் துறை முக்கியப் பங்குடன் நடப்பு விலையில் இரட்டை இலக்க வளர்ச்சி பதிவானது.
- அதே காலக் கட்டத்தில், தமிழ்நாட்டின் உற்பத்தி GSDP என்பது 1.46 லட்சம் கோடி ரூபாய் அதிகரித்துள்ளது.
- இம்மாநிலத்தில் கிட்டத்தட்ட 40,121 தொழிற்சாலைகள் உள்ளன என்பதோடு அவை சுமார் 24.75 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பை வழங்குகின்றன.
- 2024-25 ஆம் ஆண்டில் சுமார் 11% வளர்ச்சியுடன், கட்டுமானத் துறையும் வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்கப் பங்களிப்பை வழங்கியுள்ளது.

- சேவைத் துறை மாநிலத்தின் மொத்த மதிப்பு கூட்டலில் கிட்டத்தட்ட சுமார் 53% என்ற அளவிற்குப் பங்களிக்கிறது.
- இது 2024-25 ஆம் ஆண்டில் 11.3% உண்மையான வளர்ச்சியைப் பதிவு செய்தது.
- 2025-26 ஆம் ஆண்டில் நிதிப் பற்றாக்குறையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3% ஆக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது, அதே நேரத்தில் 2021-22 ஆம் ஆண்டில் 27% ஆக இருந்த கடன்-மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 2024-25 ஆம் ஆண்டில் 26% ஆகக் குறைந்துள்ளது.




## பசுமை ஹைட்ரஜன் சோதனைத் திட்டம்





- இந்தியாவில் உள்ள வ.உ. சிதம்பரனார் (VoC) துறைமுகம் ஒரு பசுமை ஹைட்ரஜன் சோதனைத் திட்டத்தைத் தொடங்க உள்ளது.
- இந்தத் திட்டம் பசுமை ஹைட்ரஜன் மற்றும் அதன் விளை பொருட்களின் எரிபொருள் நிரப்பும் வசதியை அமைக்க உள்ளது.

- உள்நாட்டு மற்றும் சர்வதேச வழித்தடங்களில் இயங்கும் கப்பல்களுக்கு இந்த வசதி எரிபொருள் சேவை அளிக்கும்.
- கப்பல் துறையிலிருந்து கார்பன் டை ஆக்சைடு ($CO_2$) வெளியேற்றத்தைக் குறைப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

## நவோதயா பள்ளிகளுக்கான நிலம்


- ஆறு வாரங்களுக்குள் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஜவஹர் நவோதயா வித்யாலயாக்கள் (JNVs) அமைப்பதற்கான நிலத்தை அடையாளம் காணுமாறு உச்ச நீதிமன்றம் (SC) தமிழக அரசுக்கு உத்தரவிட்டது.
- மாநிலத்தில் நவோதயா பள்ளிகளை அமைப்பதற்கான எட்டு ஆண்டுகாலத் தடையை நீதிமன்றம் மாற்றியமைத்தது.
- மத்திய அரசும் மாநில அரசும் பரஸ்பர ஆலோசனைகளை நடத்தி அறிக்கையினைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று நீதிமன்றம் கோரியது.
- நிலத்தை அடையாளம் காண்பது என்பது பள்ளிகளின் கட்டுமானத்தைத் தொடங்கச் செய்வதைக் குறிக்காது என்று நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.
- நிலத்தை அடையாளம் காண்பது என்பது நிலுவையில் உள்ள கல்வித் திட்ட நிலுவைகள் உட்பட, மத்திய அரசிடம் தனது குறைகளை எழுப்ப என்று மாநிலத்திற்கு சுதந்திரம் வழங்கப் பட்டது.




## தூத்துக்குடி பொருட்களுக்கான புவிசார் குறியீடு

- தூத்துக்குடி உப்பு, ஆத்தூர் பூவன் வாழைப்பழம் மற்றும் வில்லிசேரி எலுமிச்சை ஆகியவற்றிற்கு புவிசார் குறியீடுக்கான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
- தூத்துக்குடி உப்பு ஆனது சூரிய ஒளியில் ஆவியாதல் முறையைப் பயன்படுத்தி தயாரிக்கப் படுகிறது என்பதோடு தூத்துக்குடி உப்பு இந்தியாவின் மொத்த உப்பு உற்பத்தியில் சுமார் 30% பங்களிக்கிறது.
- தாமிரபரணி கால்வாய் பாசனப் பகுதியில் ஆத்தூர் மற்றும் அருகிலுள்ள கிராமங்களில் பூவன் வாழை பயிரிடப்படுகிறது.

- கோவில்பட்டியைச் சேர்ந்த வில்லிசேரி எலுமிச்சை அதன் வலுவான நறுமணம், அதிக சாறு உள்ளடக்கம், குறைவான விதைகள் மற்றும் நீண்ட நாட்கள் வீணாகாமல் இருத்தலுக்குப் பெயர் பெற்றது.




## தமிழ்நாட்டில் வேளாண் துறை நிலை 2025

# Negative growth

A look at the performance of the agriculture sector in Tamil Nadu



**Net State Value Added (added by economic activity)**

**Agriculture**

(At constant prices - Base: 2011-12)

| Year | Value (₹ in lakh) | Y-O-Y growth rate |
|---|---|---|
| 2020-21 | 46,79,987 | 4.00% |
| 2021-22 | 51,36,564 | 9.76% |
| 2022-23 | 54,58,837 | 6.27% |
| 2023-24 | 52,83,120 | -3.22% |
| 2024-25 | 51,86,276 | -1.83% |

**Rice production**
(in thousand tonnes)

| Year | Quantity | Y-O-Y growth rate |
|---|---|---|
| 2020-21 | 6,881.20 | -4.04% |
| 2021-22 | 7,906.60 | 14.90% |
| 2022-23 | 7,557.00 | -4.42% |
| 2023-24 | 6,799.20 | -10% |
| 2024-25 | 7,093.60 | 4.33% |

**Total foodgrains production**
(in thousand tonnes)

| Year | Quantity | Y-O-Y growth rate |
|---|---|---|
| 2020-21 | 10,823.60 | -3.96% |
| 2021-22 | 11,998.00 | 10.85% |
| 2022-23 | 11,680.40 | -2.65% |
| 2023-24 | 10,700.10 | -8.40% |
| 2024-25 | 10,926.40 | 2.11% |

Note: Total foodgrains include rice, pulses, and coarse cereals

- வேளாண்மை என்பது தமிழ்நாட்டின் பொருளாதாரத்தின் ஒரு பலவீனமான பிரிவாகும்

என்பதோடு மேலும் கடந்த இரண்டு ஆண்டுகளில், 2023–24 மற்றும் 2024–25 ஆகிய ஆண்டுகளில் அதில் எதிர்மறையான வளர்ச்சி பதிவானது.

- இது இந்திய மாநிலங்கள் குறித்த இந்திய ரிசர்வ் வங்கியின் புள்ளி விவரக் கையேட்டை அடிப்படையாகக் கொண்டது.
- வேளாண் செயல்திறன் பலவீனமாக இருந்த போதிலும், இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைத் துறைகளின் வலுவான செயல்திறன் காரணமாக இம்மாநிலத்தின் பொருளாதாரம் நன்றாக வளர்ந்துள்ளது.
- மொத்த உணவு தானிய உற்பத்தி (அரிசி, பருப்பு வகைகள் மற்றும் பருமணிகள்) 107 முதல் 120 லட்சம் டன்கள் வரை இருந்தது.
- கோவிட்-19 பெருந்தொற்றுக்குப் பிறகு, 2021–22 ஆம் ஆண்டில் அதிகபட்ச உற்பத்தி 119.98 லட்சம் டன்களாகவும், குறைந்தபட்ச உற்பத்தி 2023–24 ஆம் ஆண்டில் 107 லட்சம் டன்களாகவும் இருந்தது.
- இந்த மாநிலத்தில் அரிசி முக்கிய உணவு தானியமாக உள்ளது, அதைத் தொடர்ந்து பருமணிகள், குறிப்பாக சிறு தானியங்கள், பருப்பு வகைகள் இதில் ஒரு சிறிய பங்கை மட்டுமே வழங்குகின்றன.
- அரிசி மற்றும் பருமணிகளின் உற்பத்தி என்பது பல ஆண்டுகளாக பெரும்பாலும் நிலையானதாகவே உள்ளது.
- 2014–15 ஆம் ஆண்டில் 7.5 லட்சம் டன்னாக இருந்த பருப்பு உற்பத்தி, தற்போது சுமார் 3.6 லட்சம் டன்னாகக் குறைவாக உள்ளது.
- பருத்தி, கரும்பு மற்றும் எண்ணெய் வித்துக்கள் போன்ற உணவு அல்லாத பயிர்களின் உற்பத்தி குறைந்து வரும் போக்கைக் காட்டுகிறது.
- எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி ஆனது கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு சுமார் 11.5 லட்சம் டன்னாக இருந்தது அதன் பின்னர் அது அந்த அளவைத் தாண்டவில்லை.
- 2014–15 ஆம் ஆண்டில் 6.86 லட்சம் பேல்களாக இருந்த பருத்தி உற்பத்தி கடந்த ஆண்டு 2.1 லட்சம் பேல்களாகக் குறைந்துள்ளது.
- கரும்பு உற்பத்தி 2006–07 ஆம் ஆண்டில் 411 லட்சம் டன்னாக இருந்த நிலையில், தற்போது சுமார் 133.5 லட்சம் டன்னாக கடுமையாகக் குறைந்துள்ளது.
- பருவமழை சூழல்கள், சந்தை விலை ஏற்ற இறக்கங்கள், அரிசி தவிர பிற பயிர்களுக்கான கொள்முதல் இல்லாமை மற்றும் புதிய பயிர் வகைகள் கிடைக்காதது ஆகியவை இதற்கு முக்கியக் காரணங்களாக நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.
- வேளாண் துறையின் செயல்திறனை மேம்படுத்த, குறிப்பாக மழை பெய்யும் பகுதிகளில், தோட்டக்கலைப் பயிர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டி நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர்.

# தேசியச் செய்திகள்

## நாடு தழுவிய முட்டை பாதுகாப்பு குறித்த கண்காணிப்பு


- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் ஆணையம் (FSSAI) ஆனது நாடு தழுவிய முட்டை பாதுகாப்பு குறித்த நடவடிக்கையைத் தொடங்கியது.
- பிரபலமான தயாரிப்பு நிறுவனத்தின் முட்டைகளில் நைட்ரோஃபுரான்கள் இருப்பதாக வந்த தகவல்களுக்குப் பிறகு இந்த நடவடிக்கை தொடங்கப்பட்டது.
- நைட்ரோஃபுரான்கள் என்பது முன்னதாக உணவு உற்பத்தி செய்யும் விலங்குகளில் பயன்படுத்தப்பட்ட தடை செய்யப்பட்ட கால்நடை நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகள்

ஆகும்.

- முட்டைகளில் நைட்ரோஃபுரான்களின் பதிவுகளைக் கண்டறிய FSSAI கண்காணிப்பு மற்றும் சோதனைகளை நடத்தி வருகிறது.
- புற்றுநோயை உண்டாக்கும் ஆபத்து காரணமாக நைட்ரோஃபுரான்கள் இந்தியாவில் தடை செய்யப்பட்டுள்ளன.
- இந்த முயற்சி என்பது உணவுப் பாதுகாப்பையும் உணவுப் பாதுகாப்புச் சட்டங்களுடன் இணங்குவதையும் உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## வரதட்சணை ஒழிப்பு தொடர்பான உச்ச நீதிமன்றத் தீர்ப்பு




- வரதட்சணை ஒழிப்பு என்பது அவசர அரசியலமைப்பு மற்றும் சமூகத் தேவை என்று உச்ச நீதிமன்றம் கூறியது.
- உத்தரப் பிரதேச மாநில அரசு மற்றும் அஜ்மல் பேக் ஆகியோருக்கு இடையிலான

வழக்கில் இந்த உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

- 1961 ஆம் ஆண்டு வரதட்சணை தடைச் சட்டத்தின் கீழ் வரதட்சணை தடை அதிகாரிகளை (DPO) நியமிக்க நீதிமன்றம் மாநில அரசுகளுக்கு உத்தரவிட்டது.
- இந்திய தண்டனைச் சட்டத்தின் (IPC) பிரிவு 304-B (வரதட்சணை மரணம்) மற்றும் பிரிவு 498-A (கொடுமை) ஆகியவற்றின் கீழ் வழக்குகளை விரைவாகத் தீர்ப்பதை உறுதி செய்ய உயர் நீதிமன்றங்களுக்கு வலியுறுத்தப்பட்டது.
- வரதட்சணை தொடர்பான வழக்குகளை முறையாகக் கையாள காவல்துறை மற்றும் நீதித்துறை அதிகாரிகளுக்கு வழக்கமான பயிற்சி அளிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

# சர்வதேசச் செய்திகள்

## இந்தியா-ஓமன் உத்தி சார் கூட்டாண்மை

- இந்தியா மற்றும் ஓமன் ஆகியவை 2025 ஆம் ஆண்டில் அவற்றின் அரசுமுறை உறவுகள் நிறுவப்பட்டதன் 70 ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்றன.
- இந்தியாவும் ஓமனும் விரிவான பொருளாதார கூட்டாண்மை ஒப்பந்தத்தில் (CEPA) கையெழுத்திட வாய்ப்புள்ளது.
- 14வது இந்தியா-ஓமன் உத்தி சார் ஆலோசனைக் குழு கூட்டம் ஓமனின் மஸ்கட்டில் நடைபெற்றது.
- அரசியல், பாதுகாப்பு, காப்பு, வர்த்தகம், எரிசக்தி, கல்வி மற்றும் கலாச்சாரத் துறைகளில் உள்ள கூட்டுறவினை இந்தியாவும் ஓமனும் மதிப்பாய்வு செய்தன.
- 2024–2025 ஆம் நிதியாண்டில் இந்தியாவிற்கும் ஓமனுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகம் 10.61 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்தது.




## 16 வயதுக்குட்பட்டோர் சமூக ஊடகத்தைப் பயன்படுத்தத் தடை

- 16 வயதுக்குட்பட்ட பதின்ம வயதினர் சமூக ஊடகத்தினைப் பயன்படுத்த தடை செய்த

உலகின் முதல் நாடாக ஆஸ்திரேலியா மாறியுள்ளது.

- இன்ஸ்டாகிராம், பேஸ்புக், டிக்டாக், யூடியூப், எக்ஸ், ஸ்னாப்சாட், ரெடிட் மற்றும் ட்விட்ச் போன்ற தளங்கள் 16 வயதுக்குட்பட்ட பயனர்களை முடக்க வேண்டும் என்று சட்டம் கோருகிறது.
- சட்ட மீறல்களுக்காக பெற்றோர்கள் மற்றும் குழந்தைகள் மீது அபராதங்கள் விதிக்கப் பட மாட்டாது.
- தடையை மீறும் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு 32 மில்லியன் அமெரிக்க டாலர்கள் வரை அபராதம் விதிக்கப்படலாம்.
- தீங்கு விளைவிக்கும் இயங்கலை உள்ளடக்கத்திலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்க இந்தத் தடை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## மைத்ரி II - அண்டார்டிக் நிலையம்

- மைத்ரி II என்பது கிழக்கு அண்டார்டிகாவில் நிறுவுவதற்கு இந்தியாவினால் முன் மொழியப் பட்ட அடுத்த தலைமுறை நுட்பத்திலான ஆராய்ச்சி நிலையமாகும் என்ற நிலையில் இது 2032 ஆம் ஆண்டிற்குள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்த நிலையம் ஷிர்மேக்கர் ஒயாசிஸ் பகுதியில் 1989 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வரும் மைத்ரி I நிலையத்திற்கு மாற்றாக அமையும்.
- மைத்ரி II நிலையத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட செலவினம் 2,000 கோடி ரூபாயாகும்.

- மைத்ரி II பருவநிலை அறிவியல், பனிப்பாறையியல், உயிரியல், வளிமண்டல அறிவியல், புவி அறிவியல் மற்றும் நீண்டகாலச் சுற்றுச்சூழல் கண்காணிப்பு ஆகியவற்றிலான பல்துறை ஆராய்ச்சியை ஆதரிக்கும்.




## துல்லிய வழிகாட்டுதலுடன் கூடிய ஆயுதம் – HAMMER





- AASM (Armement Air-Sol Modulaire) என்றும் அழைக்கப்படுகின்ற HAMMER (Highly Agile Modular Munition Extended Range) ஆனது ஒரு துல்லிய வழிகாட்டுதலுடன் கூடிய வானில் இருந்து தரையில் உள்ள இலக்கினைத் தாக்கி அழிக்கும் ஆயுதமாகும்.
- பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் (BEL) மற்றும் சஃப்ரான் இடையேயான 50:50 வீதத்திலான ஒரு கூட்டு முயற்சியின் மூலம் இந்தியாவில் HAMMER ஆயுதங்களை தயாரிப்பதற்காக பிரான்சின் சஃப்ரான் நிறுவனத்துடன் இந்தியா ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

- HAMMER ஆனது வழிகாட்டுதல் மற்றும் உந்துவிசை கருவிகளைப் பயன்படுத்தி வழக்கமான குண்டுகளை துல்லியத் தாக்குதல் ஆயுதங்களாக மாற்றுகிறது.
- இது INS-GPS (நிலைமம் சார் வழிசெலுத்தல் அமைப்பு–புவியிடங்காட்டி அமைப்பு), அகச் சிவப்பு மற்றும் லேசர் வழிகாட்டுதல் போன்ற வழிகாட்டுதல் தேர்வுகளை கொண்டு உள்ளது.
- HAMMER ஆயுதத்தினைப் பாதுகாப்பான வரம்புகளிலிருந்து பயன்படுத்தலாம் என்ற நிலையில் இதனை ரஃபேலுடன் ஒருங்கிணைக்கப்பட்டு தேஜாஸ் விமானங்களில் இணைக்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகளாவிய மதிப்புச் சங்கிலி மேம்பாட்டு அறிக்கை 2025




- "Rewiring GVCs in a Changing Global Economy" என்ற அறிக்கையானது ஆசிய மேம்பாட்டு வங்கி (ADB), உலக வர்த்தக அமைப்பு (WTO) மற்றும் உலகப் பொருளாதார மன்றம் (WEF) ஆகியவற்றால் கூட்டாக வெளியிடப்பட்டது.
- உலகளாவிய மதிப்புச் சங்கிலிகள் (GVC) என்பது, ஒவ்வொரு கட்டத்திலும் மதிப்புக் கூட்டப்ப டுவதுடன் கூடிய இறுதிக் கட்ட நுகர்வோர் பொருளுக்கான உற்பத்தி தொடர் ஆகும் என்பதோடு மேலும் வெவ்வேறு நாடுகளில் இவற்றில் இருந்து குறைந்தது இரண்டு நிலைகளில் இது மேற்கொள்ளப் படுகின்றது.
- தொழில்நுட்ப மாற்றம், பசுமை மாற்றம் மற்றும் மாறி வரும் புவிசார் அரசியல் சூழல் காரணமாக இந்த GVCகள் மாற்றியமைக்கப் படுகின்றனவே தவிர இதற்கு நேர்மாறாக மாற்றப் படுவதில்லை.
- வர்த்தகத்தில் GVCகளின் உலகளாவியப் பங்கு 46.3% ஆகும் என்பதோடு இது 2022 ஆம் ஆண்டில் 48% ஆக இருந்தது.
- சேவைகள் மற்றும் டிஜிட்டல் வர்த்தகம் ஆனது, தற்போது உற்பத்தி ஏற்றுமதியில் மதிப்புக் கூட்டலில் மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகமாக உள்ளது.
- ஆசியா, ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கா ஆகிய பிராந்திய மையங்கள் GVC வர்த்தகத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றன; இலத்தீன் அமெரிக்கா மற்றும் ஆப்பிரிக்கா

ஆகியவை பின்தங்கியுள்ளன.

- வளர்ந்து வரும் போக்குகளில் சீனா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் மறுசீரமைப்பு மற்றும் மின்சார வாகனங்கள் (EV) உற்பத்தி (உலகளவில் 76.9%) போன்ற துறைகளில் சீனாவின் ஆதிக்கம் இருந்த போதிலும் உற்பத்தியின் பல்வகைப்படுத்தல் ஆகியவை அடங்கும்.
- ஏற்றுமதியில் உலகளாவிய உள்நாட்டு மதிப்பில் சுமார் 2.8% பங்கைக் கொண்டு (2024) இந்தியா முதல் 10 மதிப்பு கூட்டும் பொருளாதாரங்களில் ஒன்றாக உள்ளது.
- இதில் 1% அதிகரிப்பு என்பது தனிநபர் வருமானத்தை வழக்கமான வர்த்தகத்தை விட இரண்டு மடங்கு அதிகரிப்பதுடன், GVC பங்கேற்பு வறுமைக் குறைப்புக்குப் பங்களிக்கிறது.
- GVC ஆனது குறிப்பாக வங்காளதேசத்தின் ஏற்றுமதி சார் ஆடைத் துறையில் காணப் படுவது போல், உழைப்பு மிகுந்த மற்றும் பெண் சார்ந்த வேலைகளில் வேலைவாய்ப்பு உருவாக்கத்தை ஊக்குவிக்கின்றன.

# மாநிலச் செய்திகள்

## பஞ்சாபில் உள்ள புனித நகரங்கள்




- பஞ்சாப் அரசு அமிர்தசரசு, ஸ்ரீஅனந்த்பூர் சாஹிப் (ரூப்நகர் மாவட்டம்), மற்றும் தல்வண்டி சபோ (ஸ்ரீ தம்தாமா சாஹிப், பதிண்டா மாவட்டம்) ஆகியவற்றைப் புனித நகரங்களாக அறிவித்தது.
- இந்த நகரங்களின் சமயம் சார் புனிதத்தன்மை மற்றும் கலாச்சாரத் தன்மையைப்


பாதுகாப்பதே இந்தப் பிரகடனத்தின் நோக்கமாகும்.

- அறிவிக்கப்பட்ட நகராட்சி எல்லைக்குள் மதுபானம் மற்றும் போதைப்பொருட்களின் விற்பனை மற்றும் நுகர்வு தடை செய்யப் பட்டுள்ளது.
- இந்தப் பகுதிகளில் இறைச்சி விற்பனை மற்றும் நுகர்வு தடை செய்யப் பட்டுள்ளது.

# இதரச் செய்திகள்

## வேலைவாய்ப்பு குறித்த NCAER அறிக்கை 2025

- "இந்தியாவின் வேலைவாய்ப்பு வாய்ப்புகள்: வேலை வாய்ப்புகளுக்கான பாதைகள்" (India's Employment Prospects: Pathways to Jobs) என்ற தலைப்பிலான ஓர் அறிக்கை தேசியப் பயன்பாட்டுப் பொருளாதார ஆராய்ச்சி சபையினால் (NCAER) வெளியிடப்பட்டது.
- சிறு நிறுவனங்களின் திறமையான பணியாளர்கள் மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிப்பதன் மூலம் இந்தியாவில் கணிசமான வேலைவாய்ப்பை உருவாக்க முடியும் என்று ஆய்வு கண்டறிந்துள்ளது.
- கடன் பெறுவதில் சுமார் 1% அதிகரிப்பு கூட எதிர்பார்க்கப்படும் பணியமர்த்தப்படும் தொழிலாளர்களின் எண்ணிக்கையை 45% அதிகரிக்கிறது.
- டிஜிட்டல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் நிறுவனங்கள், அத்தகைய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தாத நிறுவனங்களை விட 78% அதிகத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துகின்றன.
- உழைப்பு மிகுந்த உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் வேலைவாய்ப்புகளை வலுப் படுத்துவது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியை சுமார் 8 சதவீதத்தில் நிலை நிறுத்த உதவும்.
- முறையாக திறம் பெற்றப் பணியாளர் வளத்தினை 9-12% புள்ளிகள் அதிகரிப்பது 2030 ஆம் ஆண்டளவில் சுமார் 9.3 மில்லியன் கூடுதல் வேலை வாய்ப்புகளை உருவாக்கலாம் அல்லது வேலைவாய்ப்பில் 13% அதிகரிப்பை ஏற்படுத்தலாம்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★